2010 மே 12] [பேரவைத் தலைவர்]

முற்பகல் 11-20

அவையின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து இடையூறு செய்தும், அவையின் கண்ணியத்தையும், மரபையும் மீறி, அவைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில் நடந்துகொண்ட அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. கோ. அரி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. டி. ஜெயக்குமார், திரு. வி.பி. கலைராஜன், திரு. எல். ரவிச்சந்திரன், ஆகியோர் 12-5-2010 மற்றும் 13-5-2010 ஆகிய இரண்டு நாட்களுக்கு பேரவைப் பணிகளினின்று நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) பாரத் எரிவாயு நிறுவனம், எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும்போது மளிகைப் பொருட்களையும் வாங்குமாறு வற்புறுத்துவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Bharath Gas Agency நிறுவனம் ரூ.100/-க்கு மளிகைப் பொருட்களை வாங்கினால்தான் சமையல் எரிவாயு சிலிண்டர் சப்ளை செய்யப்படுமென்று வாடிக்கையாளர்களை வற்புறுத்துவது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் விதி 56 மற்றும் 55-இன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களான பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகிய 3 நிறுவனங்கள் நம்முடைய தமிழகத்திலே வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயுவை நாடு முழுவதும் சப்ளை செய்வதற்கான Dealership-ஐ பல

[திரு. சி. ஞானசேகரன்] [2010 மே 12

பேருக்குக் கொடுத்திருக்கின்றன. அவர்களும் சமையல் எரிவாயுவை வீடுகளுக்கு வழங்கி வருகிறார்கள். இப்போது புதிதாக, 'Beyond L.P.G.' என்கிற ஒரு திட்டத்தை இந்த 3 நிறுவனங்களும் அறிமுகப்படுத்தியிருக்கின்றன. இதிலே, பாரத் பெட்ரோலிய நிறுவனமும் இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனமும் வீட்டு உபயோகத்திற்கு வழங்குகிற Gas Cylinder-ஐ ஒருவர் பெறவேண்டுமென்று சொன்னால், அவர்கள் Mysore sandal soap, Grinder, Mixie, Fire Extinguisher, Electric rice cooker, Electric stove, அரிசி, பருப்பு போன்றவற்றையெல்லாம் வாங்க வேண்டுமென்று நிர்பந்திக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், பொதுவாக பாரத் பெட்ரோலிய நிறுவன Dealer-களுக்கு, அவர்கள் மாதத்திற்கு 3 இலட்சம் ரூபாய்க்காவது பொருட்களை விற்றாக வேண்டுமென்ற நிபந்தனையை விதித்திருக்கிறார்கள். இதன் காரணமாக, இவர்கள் வாங்கி வைத்திருக்கிற வீட்டு உபயோகத்திற்கான பொருட்களை, உபயோகிப்பாளர்கள்—consumers குறைந்தபட்சம் 100 ரூபாய்க்காவது வாங்கினால்தான், Gas Cylinder வழங்கப்படுமென்கிற நிபந்தனையைத் தமிழகத்தின் பல பகுதிகளிலே விதித்திருக்கிறார்கள். I.O.C. நிறுவனம் தங்களுக்கும் அப்படிப்பட்ட நிபந்தனை விதித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் இன்னும் அதைச் செயல்படுத்த முற்படவில்லை. பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனங்கள்தான் இந்த நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள். ஆகவே, நான் நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்வதெல்லாம், பொதுவாக, இப்படிப்பட்ட நிலை வருகிறபொழுது, 100 ரூபாய்க்காவது பொருட்களை வாங்கினால்தான் Gas Cylinder வழங்கப்படுமென்கிற நிலையை மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுபோன்ற நிறுவனங்கள் விதித்திருக்கக்கூடிய நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல, இப்பொழுது ஒருவர் Gas book செய்ய வேண்டுமென்று சொன்னால், ஒரு Gas Cylinder பெற்ற பிறகு, குறைந்தபட்சம் 20 நாட்கள் கடந்துதான் renewal, அதாவது, Gas Cylinder வேண்டுமென்று அவர்கள் பதிவு செய்ய வேண்டும். அப்படிப் பதிவு செய்த பிறகு, 20 நாட்கள் கடந்துதான் Gas Cylinder, supply செய்யப்படுகிறது. ஆகவே, 40 நாட்களிலிருந்து 60 நாட்களுக்குப் பிறகுதான் ஒரு Cylinder பெறுவதற்கான நிலை

2010 மே 12] [திரு. சி. ஞானசேகரன்]

ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு உடனடியாக இதை மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுபோன்ற நிறுவனங்கள், ஒருவர் Gas வேண்டுமென்று book செய்தால் condition இல்லாமல், எந்தப் பொருட்களையும் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தாமல், உடனே Gas supply சப்ளை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பதிவு செய்த 2, 3 நாட்களிலே அவர்களின் வீட்டு உபயோகத்திற்கு Gas Cylinder-ஐ வழங்குவதற்கான சூழலை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அதுவும் இப்போதெல்லாம் இலவச எரிவாயு கொடுப்பவர்களுக்கு 60 நாட்கள் கடந்துதான், அவர்கள் பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு கட்டளையைப் பிறப்பிக்கிறார்கள். ஆகவே, அப்படிச் செய்கிறபொழுது, free gas கொடுத்தும், 60 நாட்கள் கடந்துதான் Cylinder வருகிறது என்ற ஒரு நிலை தமிழகத்தில் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிபந்தனைகளை விதிக்காமல், எப்போது அவர்கள் பதிவு செய்கிறார்களோ அதற்கடுத்த நாள் அல்லது அதற்கு மறுநாளே அவர்களுக்கு Cylinder வழங்குவதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டும். நம்முடைய அரசு மத்திய அரசோடு பேசி, இந்த நிறுவனங்களுக்கு ஒரு அறிவுரை வழங்கி, Gas Cylinder-கள் மிக எளிதில் வீட்டு உபயோகிப்பாளர்களுக்குக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம். எல்லோரும் இதைத்தானே சொல்லப் போகிறீர்கள்? நேரத்தின் அருமை கருதி, அவர் சொன்னதையே அப்படியே சொல்ல வேண்டியதுதானே? (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிறுவனங்களான பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம், இவை இரண்டும் gas இணைப்புகளைத் தருகின்றபோது, நம்முடைய நுகர்வோர்கள் அதை வாங்கிப் பயன்படுத்துகிறபொழுது, அதனுடைய Agency, அதனுடைய Dealer மூலமாக ஒரு target-ஐ நிர்ணயிக்கிறார்கள். அந்த target என்னவென்று சொன்னால், இந்த gas அடுப்பைப்

[திரு. தி. வேல்முருகன்] [2010 மே 12

பயன்படுத்தி சமைக்கிற அத்தனை பொருளையும், ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவரும் பயன்படுத்துகிற சோப்பிலேயிருந்து, எண்ணெயிலிருந்து அத்தனையையும் வாங்கச் சொல்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், சில Agency நிறுவனங்கள், Sim Card, Cell, Cell-இனுடைய Charger, இவற்றையும் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 20 அல்லது 25 ஆண்டுகளுக்கு முன்பு இதெல்லாம் கிடையாது. சமீபகாலமாக, ஒரு 4, 5 ஆண்டு காலமாகத்தான் இந்த target-ஐ நிர்ணயிக்கிறார்கள். இது ஏன்? ஏற்கெனவே ரூ.75/-, ரூ.60/-க்கு நுகர்வோர்களாகிய பொது மக்களுக்குக் கிடைத்த Cylinder இன்றைக்கு ரூ.350/-ல் வந்து நிற்கிறது. இது போதாதென்று நுகர்வோர்களாகிய பொது மக்களிடம் சில பொருட்களை condition-ஆக அவர்கள் வாங்கிச் செல்ல வேண்டும் என்கிறார்கள். 'எங்களுக்கு மத்திய அரசாங்கம், இந்திய ஆயில் நிறுவனம், இந்துஸ்தான் ஆயில் நிறுவனம், பாரத் பெட்ரோலிய நிறுவனம் ஒரு target-ஐத் தந்திருக்கிறார்கள், அதனால், தயவுசெய்து நீங்கள் இதை வாங்கிச்செல்லுங்கள்' என்று சொல்கிறார்கள். அப்படி வாங்கிச் சென்றால்தான், அந்த seniority அடிப்படையில் Cylinder தருவதற்கான உத்தரவாதத்தைத் தரமுடியும் என்கிற அடிப்படையில் ஒரு condition வைத்து இதை விற்பனை செய்கின்றபோது, அதைப் பயன்படுத்துகிற, அதை வாங்குகிற பொது மக்கள் மிகப் பெரிய துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாகிறார்கள். காரணம், ஏற்கெனவே gas cylinder-ன் விலை இன்றைக்கு ரூ.350/-ஐத் தாண்டிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில், இதுபோன்று இன்னின்ன பொருட்களை இவர்கள் குறைந்தபட்சம் ஒவ்வொரு Dealer-ம் ஒரு நாளைக்கு ரூ5,000/- அளவிற்கு விற்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் எங்கே போய் விற்க முடியும்? பொது மக்களிடத்தில்தான் விற்று, அதிகமாக அந்தப் பணத்தை வாங்குகிற ஒரு நடவடிக்கையிருக்கிறது. ஆதலால், இது பொது மக்களிடத்திலே மிகப் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தினுடைய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனாக இருந்தாலும் அல்லது பாரத் பெட்ரோலியமாக இருந்தாலும் அவர்கள் சொல்லியிருந்தாலும்கூட, தமிழ்நாட்டில் விற்கின்றபோது அந்த விலையேற்றம் என்பது மக்களைப் பாதிக்கிறது. அதனால் நம்முடைய அரசுக்கும் இதிலே அவப்பெயர் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக

2010 மே 12] [திரு. தி. வேல்முருகன்]

மத்திய அரசு நிறுவனங்களை அணுகி, பெட்ரோலிய நிறுவனங்களை அணுகி உடனடியாக ஒரு கடிதம் எழுதி தமிழ்நாட்டில் இதுபோன்ற திணிப்புகள் அல்லது target வைத்து விற்பதில் நீங்கள் இங்கு ஈடுபடக்கூடாது என்கிற அளவிலே மத்திய அரசாங்கத்தை அணுகி அதைத் தடுப்பதற்கும், குடும்பத்திற்கு gas cylinder book பண்ணினால் gas cylinder கொடுத்துவிட்டு, அதற்குண்டான பணத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அளவிலே நுகர்வோர்களுக்கு எந்த ஒரு நிர்பந்தத்தையும் தராதவண்ணம் நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்கிற அளவில் அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத் பெட்ரோலிய நிறுவனம் சமையல் எரிவாயு உருளையை வழங்குகிறபோது, கூடுதலாகப் பொருட்கள் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். இதுகுறித்து அரசும், இந்தத் துறையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்வதோடு, இந்தப் பிரச்சினையில், gas cylinder என்பது மிக மிகத் தாமதமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. கிராமங்களிலேகூட இன்றைக்கு விறகு அடுப்பு எங்கேயும் உபயோகத்தில் இல்லை. ஆகவே, இத்தகைய சூழ்நிலையில் gas-ஐ நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. 60 நாட்கள், 70 நாட்கள் ஆகிறபோது, குடும்பங்களில் பெண்களுக்கும், குடும்பத்தினுடைய உறுப்பினர்களுக்கும் மிகப் பெரிய சிரமத்தைத் தந்துகொண்டிருக்கிறது. ஆகவே, பாரத் பெட்ரோலிய நிறுவனம் மட்டுமல்ல, அதோடு இணைந்திருக்கக்கூடிய எரிவாயு வழங்கக்கூடிய நிறுவனங்கள் எல்லாமே இவ்வாறு காலதாமதம் செய்கின்றன. இதை முறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் என்னதான் முன்முயற்சி எடுத்தாலும், அது நடப்பதேயில்லை. ஆகவே, இதில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வளவு நாட்கள் இடைவெளியை குறைத்து, முறையாகப் பதிவு செய்தவர்களுக்கு gas cylinder வழங்கப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதோடு, gas கிடைக்காத காலங்களில் மண்ணெண்ணெய்க்குச் செல்கிறபொழுதும் அரசு நிறுவனங்களிலேயே பொருட்கள் கூடுதலாக வாங்க

[செல்வி கே. பாலபாரதி] [2010 மே 12

வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. தனியார் சோப்பிலிருந்து, வேறுவிதமான தனியார் நிறுவனங்களினுடைய பொருட்களைக் கட்டாயமாக வாங்க வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. நாங்கள் அப்படி வலியுறுத்துவது இல்லை, வற்புறுத்துவது இல்லை என்று அதிகாரிகள் தரப்பில் சொல்லப்பட்டாலும், அது தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. ஆகவே, தனியார் நிறுவனமாக இருந்தாலும் சரி, அரசு நிறுவனமாக இருந்தாலும் சரி, கட்டாயப்படுத்தக்கூடாது என்பதிலே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற முறையில் தங்களது கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

முற்பகல் 11-30

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Bharat Gas Agency நிறுவனம், I.T.C., Bajaj, Glaxo போன்ற நிறுவனங்களோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம் என்ற காரணம் காட்டி, மளிகைப் பொருட்கள் 100 ரூபாய்க்கு வாங்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள். மஞ்சள் தூள், கோதுமை மாவு, மைதா, மிளகாய்த் தூள், குளியல் சோப்பு, சிப்ஸ் பாக்கெட், ஊதுபத்தி, பிஸ்கட், பல்புகள், இவற்றையெல்லாம் வாங்க வேண்டும் என்று நிர்பந்தப்படுத்துகிறார்கள். இது மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற உலகமயமாக்கல் கொள்கை, அதன்மூலமாக ஏற்பட்டிருக்கிற அந்த தாராளமயக் கொள்கை இந்த Bharat Gas Agency நிறுவனத்தால் பொது மக்களிடத்திலே நிர்பந்தப்படுத்தப்படுகிறது என்பதுதான் இதிலே இருக்கிற ஆழமான செய்தி. ஆகவே, இதன்மீது மாண்புமிகு முதல்வர் அவர்களும், நமது உணவுத் துறை அமைச்சர் அவர்களும் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். Gas வாங்குவதற்கு 320 ரூபாய் செலுத்த வேண்டியிருக்கிறது. அதோடு சேர்த்து, கட்டாயமாக 100 ரூபாய்க்கான பொருட்களை வாங்க வேண்டுமென்று வலியுறுத்தி, 420 ரூபாய் வழங்கினால்தான், Gas Cylinder வழங்கப்படும் என்று நிர்பந்தப்படுத்தினால், சாதாரண, நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இதை வாங்குவது எவ்வாறு என்பதுதான் இப்பொழுது இருக்கிற கேள்வி. ஆகவே, இந்த நிர்பந்தத்தைக் குறைக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய

2010 மே 12] [திரு. வை. சிவபுண்ணியம்]

இந்தத் திட்டம், மறைமுகமாக மக்கள்மீது திணிக்கப்படுகிற இந்தக் கொள்கையை மாற்ற வேண்டும் என்று நமது மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, Gas Cylinder-ஐத் தட்டுப்பாடு இல்லாமலும், காலத்திலும் கிடைக்கச் செய்வதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டுரங்கன், அறிவிப்புக் கொடுத்தவர்களைத்தான் பேச அனுமதிக்க முடியும். உட்காருங்கள். (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுத்தவர்கள் list என்னிடம் உள்ளது. அந்த list-ல் உள்ளவர்களைத்தான் கூப்பிட முடியும். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-4-2010 ஆம் தேதியிட்ட நாளிதழில், தமிழகத்திலே பல பகுதிகளில் Bharat Gas நிறுவன Agency-கள் வாடிக்கையாளர்களுக்கு Gas Cylinder supply செய்யும்போது, கோதுமை மாவு, மைதா, பல்பு, எண்ணெய், குளியல் சோப்பு, சிப்ஸ் பாக்கெட், ஊதுபத்தி போன்ற சுமார் ½ கிலோ எடையுள்ள பொருட்களைக் கட்டாயப்படுத்தி விற்பதாக ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தியை மையமாக வைத்துக்கொண்டு, அரசின் சார்பாக சம்பந்தப்பட்ட பூவிருந்தவல்லியிலுள்ள K.G. Bharat Agency என்கிற அந்த முகவர் பகுதியிலே சம்பந்தப்பட்ட எங்களுடைய துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, நேரடியாக இராமமூர்த்தியினுடைய மனைவி திருமதி ஆனந்தி, ஆர். வடிவேலு அவர்களுடைய துணைவியார் கவி வாசுகி, எம். ரவிச்சந்திரனுடைய துணைவியார் அன்பழகி போன்ற நுகர்வோர்களிடம் விசாரணை செய்தபோது, கூடுதல் பொருட்களை வாங்க வாடிக்கையாளர்களை எந்த முகவரும் எந்தக் காரணத்தைக் கொண்டும் வற்புறுத்தவில்லை. காரணம், 150 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை 100 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறார் என்ற ஒரு செய்திதான் எங்களுக்கு நேரடியாக விசாரணையிலே தெரிய வந்தது. ஆனாலும்கூட, சம்பந்தப்பட்ட அந்த Bharat Agency-யினுடைய மேலாளரை அழைத்து, இப்படி நீங்கள் கட்டாயப்படுத்தக்கூடாது என்று துறையின் சார்பாக நாங்கள் கூறியபோது, இது இப்பொழுது அல்ல, 5 ஆண்டு காலமாக I.T.C., Bajaj, Dabur போன்ற நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்யப்பட்டு, 5 ஆண்டு காலமாக இப்படி விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாங்கள் வற்புறுத்தவில்லை என்று

[திரு. எ.வ. வேலு] [2010 மே 12

மேலாளர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அவரைப் பொறுத்தவரையில் என்ன சொல்கிறார் என்று சொன்னால், Bharat Petroleum நிறுவன பகுதி மேலாளர், தங்களுடைய எண்ணெய் நிறுவனங்கள் நுகர்வோர்களுக்கு மதிப்பு அளிக்கின்ற வகையில் அவர்களுக்குப் பொருட்கள் குறைந்த விலையில் போய்ச் சேர வேண்டும் என்ற அடிப்படையில், இழப்புகளைத் தாண்டி "Beyond L.P.G." என்ற திட்டத்தின்கீழ் நாங்கள் இந்தத் தொண்டைச் செய்துகொண்டிருக்கிறோம் என்றுதான் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீங்கள் தொண்டு செய்வதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை; ஆனால், நுகர்வோரிடத்தில் நீங்கள் வற்புறுத்திக் கொடுக்கக்கூடாது என்று அறிவுரையும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வற்புறுத்துகிற செய்திகள் எங்களுக்குக் கிடைத்த காரணத்தினால்தான் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இங்கேகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள், 60 தினங்களுக்கு ஒரு முறைதான் Cylinder கிடைக்கிறது என்று சொன்னார்கள். 60 தினங்களுக்கு ஒரு முறை Cylinder கிடைப்பது எப்போதாவது ஒரு முறைதான். தொடர்ந்து அல்ல. சில நேரங்களிலே Lorry strike என்ற முறையிலே அல்லது அங்கிருந்து fill பண்ணி Gas அந்த Agency-க்கு வருகிறபோது காலதாமதம் ஏற்படுகிறதேயொழிய, தொடர்ந்து அல்ல. இப்படிப் பத்திரிகையிலே செய்தி வருகிறபோதுகூட, எண்ணெய்க் கழகங்களுடைய மேலாளர்களை அழைத்து, துறையின் சார்பாக 2 மாதங்களுக்கு ஒரு முறை, 3 மாதங்களுக்கு ஒரு முறை அழைத்து, கூட்டங்கள் எல்லாம் போடப்பட்டு, அறிவுரை வழங்கப்படுகிறது. 15 தினங்களுக்குள்ளே Cylinder கிடைக்கிறது. அப்படியும் ஏதாவது பிரச்சினை வருகிறதென்பதால், தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு திட்டத்தைத் தந்தார்கள். இதுபோன்ற எரிவாயு அடுப்புப் பிரச்சினை வருகிறபோது மாவட்ட அளவிலே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு, மாதா மாதம் ஒரு கூட்டத்தைக் கூட்டி, நுகர்வோரை அழைத்து, உங்களுக்கு என்ன பிரச்சினை என்பதைக் கேட்டறிந்து, தீர்த்துக்கொள்ள வேண்டும்; சென்னையைப் பொறுத்த அளவிலே, இணை ஆணையர் அவர்களிடத்திலே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, நேரடியாக அதில் நாங்கள் இப்பொழுது வேகமாகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறோம். இன்னும்கூட, நேரடியாகப் போக முடியாத நுகர்வோர்கள் 28592828 என்கிற தொலைபேசி

2010 மே 12] [திரு. எ.வ. வேலு]

எண்ணிலே தொடர்பு கொண்டு சொன்னால், இதுபோன்ற பிரச்சினையை உடனேயே தீர்த்துக்கொள்வதற்கு, மாநில அளவிலே அந்தக் கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொடர்ந்து இந்தப் பொருட்களை விற்பதன் மூலமாக அதிருப்தி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும், கழகங்கள் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருப்பவை. மாநில அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், நுகர்வோர்களுடைய பிரச்சினையைத்தான் தீர்க்க முடியும். ஆகவே, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பவை இந்த எண்ணெய்க் கழகங்கள். அதனால் இதுபோன்ற சிறு, சிறு பிரச்சினை வருகின்றபோது மாண்புமிகு திரு. முரளி தியோரா அவர்களிடத்திலே கடிதத்தின்மூலமாகவும் சொல்கிறோம். நேரிடையாகவும் தொடர்பு கொண்டு சொல்கிறோம்.

முற்பகல் 11-35

சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியைப் பெற்று, சட்டமன்றம் முடிந்தவுடனேயே, இப்படி வற்புறுத்தக்கூடாது என்கிற அறிவுரைகளை நீங்கள் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முரளி தியோரா அவர்களிடத்திலும் துறையின் சார்பாகச் சொல்லவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, அப்படி எங்காவது வற்புறுத்தினால், உடனே துறைக்கு நீங்கள் கடிதம் அனுப்பினாலும் சரி அல்லது அந்த எண்ணிற்கு நீங்கள் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு தெரிவித்தால், அப்படி வற்புறுத்தக்கூடாது என்ற அறிவுரையை இந்த அரசு வழங்கும்.

TRUTH ALONE TRIUMPHS

6. கவன ஈர்ப்பு

'கண்வலிக் கிழங்கு விதைகள்' விவசாயிகளுக்கு உரிய விலையில் கிடைக்கச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. அர. சக்கரபாணி, திரு. எஸ்.கே. வேதரத்தினம் மற்றும் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.